Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 19 | (03-01-1993) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 320

## யாழ். அகதி முகாம்களில் பயிர் செய்கை முயற்சி

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதிமுகாம்களில் உணவுப் பயிர்களை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. மேற்படி நடவடிக்கையில் யாழ். மாவட்டத்தில் சேவையிலீடுபட்டுவரும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இறங்கியுள்ளன. அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கு போசாக்குணவைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அகதிகள் முகாம்களில் மேற்படி பயிர்ச் செய்கையில் ஈடுபட இருக்கும் மக்களுக்குத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சமாதானத் தீர்வு காணாவிடில் நாடு இரண்டாக பிளவுபடும்

## ராணுவத் தீர்வு ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் என்கிறார் பிரேமா

(கண்டி)

"இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு முன்வைக்கப்பட்டால் அது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவே அமையும். இன்று நாட்டிற்குத் தேவையானது வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதான தீர்வு ஒன்றே. இதனைச் செய்வதின் மூலமே நாடு துண்டாடப்படுவதைத் தடுக்க முடியும்" இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுக் கண்டியில் பேசும் போது குறிப்பிட்டார்.

ஜனாதிபதியாக திரு. பிரேமதாசா பதவியேற்று நான்காவது ஆண்டைக் குறிக்கும் முகமாக நேற்று சரித்திரப் பிரசித்தி பெற்ற சிறி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், உலகின் எந்தவொரு நாட்டிலும் ஆயுதங்களின் மூலம் சமாதானம் நிலைநாட்டப்பட்டதாக வரலாறு இல்லை. வடக்குக் கிழக்கு பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதியான விதப்புரைகள் இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த அறிக்கைக்காக நாங்கள் ஆவலோடு காத்திருக்கிறோம். நாங்கள் நிலையான சமாதானத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்றார்.

"வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களின் அபிலாசை ஆகும். இந்தப் பிரச்சினைக்கு சாதாரண ஆயுதங்கள் மூலம் தீர்வு காண்பதற்குப்பதிலாக பௌத்த சமயத்தில் போதிக்கப்பட்ட அன்பு, பாசம், தார்மீகம், நடுநிலைமையை பேணுதல் ஆகிய சக்திகள் மூலம தீர்வுகாண்பது சாலச் சிறந்தது. எனவும்,

"இந்த நாடு சகலருக்கும் சொந்தமானது. முன்னர் நடந்தவற்றை மறப்போம். அப்படியான தவறுகள் மீண்டும் நடவாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்வோம் இந்

[4-ம் பக்கம் பார்க்க]

## புதிய ஆயுத தளபாடங்கள் வந்ததும் இராணுவ தாக்குதல் தீவிரமாகும்

### -படை அதிகாரி தெரிவிப்பு

புதிய இராணுவத் தளபாடங்கள் படையினருக்கு கிடைக்கவுள்ளன அவை வந்து பயன் படுத்தப்பட இருக்கின்றன என சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கூறி

யாழ்மாவட்ட

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிக்கு ஏற்பாடு

[கொழும்பு]

பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 700 பட்டதாரி ஆசிரியர்களுக்கு தனியான பயிற்சித்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி பட்டதாரி ஆசிரியர்களுக்கு இவ்வாறு தனியாக பயிற்சி அளிப்பதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்யவுள்ளது. இப்பயிற்சி நெறியை வழங்குவது குறித்து கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

## கப்பல் இன்மையால் அகதிகள் வருவதில் தாமதம்

[கொழும்பு]

இந்தியாவிலிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் இரண்டாயிரம் பேர் இலங்கைக்கு திரும்பி வர இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், அவர்களை அழைத்துவர கப்பல் வசதி இல்லை என்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இலங்கை அரசினால் வாடகைக்கு பெறப்பட்டுள்ள கப்பல்கள் வடபகுதிக்கு அத்தியாவசியமற்றும் உணவுப்பொருள்கள் அனுப்பப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்படும்

அண்மையில்ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதங்களை நேரில் பெறுவதற்குச் செல்லாதவர்களுக்கு கடிதம் மூலம் அந் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் படவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளன.

## அரச ஊழியர்களுக்கு மும்மொழி பயிற்சித்திட்டம்

[கொழும்பு]

இலங்கை பூராவும் அரச சேவையில் உள்ளவர்களுக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பயிற்சியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கென மூன்று மொழிகளையும் போதிக்க வல்ல பட்டதாரிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்கள், ஓய்வு பெற்றவர்கள் ஆகியோரை ஆசிரியராக நியமிக்கவும் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இத்திட்டம் முதலில் திருமலை மாவட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ராணுவ பாதுகாப்புக் கருதி காடுகளை அழிக்கத் திட்டம்

(மட்டக்களப்பு)

நாவலடி - வெலிக்கந்த வீதியில் புதிய சிறிலங்கா இராணுவ முகாம் அமைக்கப்பட

வாழைச்சேனை அல் நூர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கிழக்கு மாகாண இராணுவப்

## வீரவணக்கம்



லெப்டினன்ட் வெள்ளைத்தேவன்

யாழ்ப்பாணத்தில் 1-1 1993 அன்று சுகவீனம் காரணமாக லெப்டினன்ட் வெள்ளைத்தேவன் (கனகசபை ஜெயதாசன் சந்தை வீதி. சங்கானை) என்னும் விடுதலைப்

[4-ம் பக்கம் பார்க்க]

## நெல்லியடி பெண்மணி கனடாவில் பலி

(கொழும்பு)

கனடாவில் தனது பிள்ளைகளிடம் சென்ற நெல்லியடியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வாகன விபத்தில் சிக்கி மரணமானார்.

ஜனாதிபதியாக... தாசா பதவியேற்று நான்காவது ஆண்டைக் குறிக்கும் முகமாக நேற்று சரித்திரப் பிரசித்தி பெற்ற சிறி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், உலகின் எந்தவொரு நாட்டிலும் ஆயுதங்களின் மூலம் பட்டதாக வரலாறு இல்லை. வடக்குக் கிழக்கு பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதியான விதப்புரைகள் இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த அறிக்கைக்காக நாங்கள் ஆவலோடு காத்திருக்கிறோம். நாங்கள் நிலையான சமாதானத்தை ...என்றார்.

''வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களின் அபிலாசை ஆகும். இந்தப் பிரச்சினைக்கு சாதாரண ஆயுதங்கள் மூலம் தீர்வு காண்பதற்குப்பதிலாக பௌத்த சமயத்தில் போதிக்கப்பட்ட அன்பு, பாசம், மூலம் தீர்வுகாண்பது சாலச் சிறந்தது. எனவும்,

''இந்த நாடு சகலருக்கும் சொந்தமானது. முன்னர் நடந்தவற்றை மறப்போம். அப்படியான தவறுகள் மீண்டும் நடவாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்வோம் இந்...

[4-ம் பக்கம் பார்க்க]

# அரச ஊழியர்களுக்கு மும்மொழி பயிற்சித்திட்டம்

[கொழும்பு]

இலங்கை பூராவும் அரச சேவையில் உள்ளவர்களுக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பயிற்சியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கென மூன்று மொழிகளையும் போதிக்க வல்ல பட்டதாரிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்கள், ஓய்வு பெற்றவர்கள் ஆகியோரை ஆசிரியராக நியமிக்கவும் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இத்திட்டம் முதலில் திருமலை மாவட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ராணுவ பாதுகாப்புக் கருதி காடுகளை அழிக்கத் திட்டம்

(மட்டக்களப்பு)

நாவலடி - வெலிக்கந்த வீதியில் புதிய சிறிலங்கா இராணுவ முகாம் அமைக்கப்படவுள்ளதாகவும், இவ்வீதியின் இருமருங்கிலும் உள்ள காடுகள் வெட்டி அழிக்கப்படும் எனவும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை அல்நூர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கிழக்கு மாகாண இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் லக்கி அல்கம, கிழக்கு மாகாணப் பொலிஸ் அத்தியட்சகர் எம். அப்துல் மஜீத் வாழைச்சேனை இராணுவ முகாமைச்

[4-ம் பக்கம் பார்க்க]

# மட்டு. கச்சேரிக்குள் செல்ல பொலிசார் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கச்சேரிக்கு செல்லும் பொது மக்கள்மீது பொலிசாரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டு - கச்சேரியில் வேலை செய்யும் ஊழியர்களும் அங்கு அலுவல்கள் நிமித்தம் செல்லும் பொதுமக்களும் தமது சைக்கிள்களை கச்சேரி வாசல் வரை மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் இவர்கள் சைக்கிளை உள்ளே கொண்டு செல்ல பொலிசார் அனுமதி வழங்க மறுக்கின்றனர். இதனால் நாளாந்தம் ஊழியர்களும் பொதுமக்களும் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை கச்சேரியினுள் செல்லும் சகல பொதுமக்களும் அங்கு காவல் நிற்கும்

[4-ம் பக்கம் பார்க்க]

# எதிர்க்கட்சிகள் அரசை குறைகூறுவது பயனற்றது

**- ரணில்**

மாற்று யோசனை எதையும் முன்வைக்கத் தயாராக இல்லாத எதிர்க்கட்சிகள் அரசைக் குறை கூறுவதிலேயே அக்கறை காட்டுவதாக அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க மாத்தறையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது கூறியுள்ளார்.

# கட்சி உட்பூசல்களை விரைவில் தீர்க்குக

## சு. க. அமைப்பாளர்கள் கோரிக்கை

[கொழும்பு]

இம் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் கட்சியின் உட்பூசலை தீர்க்கா விட்டால் கட்சி பொது மாநாடு ஒன்றை கூட்டி உட்பூசலை தீர்க்குமாறு சுதந்திரக் கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் சிறிமாவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அக்கடிதத்தில் நீண்டு கொண்டு செல்லும் உட்பூசலை கட்சியின் செயற் குழு இதுவரை தீர்த்துவைக்காதது வருத்தத்துக்கது என்றும் கட்சிக் கொள்கை சிதைவடைந்து செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே இம் மாதம் முடியும் முன்னர் இதற்கு பரிகாரம் காண வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவின் உயர்வினால் நாட்டு மக்கள் கஷ்டப்படுவதாகவும், ஒரு தேர்தலை எந்த நேரமும் முகம் கொடுக்க கட்சி தயாராக இருக்க வேண்டும் என்றும் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய ஆயுத தளபாடங்கள் வந்ததும் இராணுவ தாக்குதல் தீவிரமாகும்

## -படை அதிகாரி தெரிவிப்பு

புதிய இராணுவத் தளபாடங்கள் படையினருக்கு கிடைக்கவுள்ளன அவை வந்து சேர்ந்ததும் இராணுவத் தாக்குதல்கள் தீவிரமாகும்.

புலிகளை எதிர்ப்பதற்கு இனிமேல் நவீன ஆயுதங்கள் பயன் படுத்தப்பட இருக்கின்றன என சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்கள், உலங்கு வானூர்திகள், அதிவேக ரோந்துப் படகுகள் என்பவற்றின் வருகைக்காகவே இராணுவம் காத்திருப்பதாகவும், அவை கிடைத்ததும் புலிகளுக்கு எதிரான யுத்தம் முழு வீச்சில் நடத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# தமிழ் மறக்கப்பட்டமையே இன்றைய நிலைக்கு காரணம்

## அரசகருமமொழி ஆணையாளர் தெரிவிப்பு

[கொழும்பு]

சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டு தமிழ் மறக்கப்பட்டதே இன்றைய சூழ்நிலைக்கு காரணம் என அரசகரும மொழிகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை அன்னம்மாள் பாடசாலையில் அண்மையில் ஆசிரியர்களுக்கான மொழிப் பயிற்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அவ் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அரசகரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் நிமல் சமரசுந்தர இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

1948 இற்குப் பின்னர் தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லை 1956-ல் சிங்களம் அரச மொழியாக ஆக்கப்பட்ட போது தமிழ் மறக்கப்பட்டுவிட்டது. இவைகளின் பிரதிபலன்களே இன்றைய சூழ்நிலைகளாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழ், சிங்கள இரு இனமும் இங்கு வாழ்ந்து வருகின்றன. சிங்கள மக்கள் வங்காளத்திலிருந்து [இன்றைய வங்களாதேஷ்] இங்குவந்தவர்கள். தமிழர்கள் தென் இந்தியாவில் இருந்து இராமேஸ்வரம் வழியாக இங்கு வந்தவர்கள்.

அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு தமிழ் மன்னன் 40 ஆண்டு காலம் ஆட்சி செய்திருக்கின்றான்.

தமிழ் நாட்டிலிருந்து தமிழ் படைகள் இங்கு சிங்கள மன்னர்களால் வருவிக்கப்பட்டிருக்கின்றன.

மகாபலிபுர சிற்பங்களின் தழுவல்தான் கம்பொலன் நறுவை கல் விகாரையில் காணக் கூடியதாகவுள்ளது. தென் இந்தியாவும், இலங்கையும் கலாசாரத்தில் மிக நெருங்கியே உறவாடி வந்துள்ளன.

ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் ஒரு தமிழன் அவனோடு சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளார்கள். தமிழ் சிங்கள கலப்பு மணங்கள் அண்மைக் காலம்வரை நடந்து வந்துள்ளன. நடந்தும் வருகின்றன.

இந்திய கபில வஸ்துவைச் சேர்ந்தவர் புத்தர். ஆகவே இந்திய - இலங்கை உறவு ஆதிகாலம் தொட்டு ஒன்றுடன் ஒன்று பிணைந்ததாகும். விஜயன் தன் நண்பர்கள் 700 பேருடன் புத்தளம் பக்கத்தில் உள்ள பூக்குளம் என்ற ஊருக்கே வந்து சேர்ந்தான்.

(4. ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் லாபம் கருதியே புலிகளுக்கு எதிராக யுத்தம்

## -சுபத்திரதேரோ

''நாட்டில் இன்று உடனடியாகத் தேவைப்படுவது சமாதானம். சமாதானத்தை எட்டுவதற்கு முயற்சிக்காமல் அரசியல் வாதிகள் அரசியல் இலாபம் கருதி படைகளை விடுதலைப் புலிகளுக்கு எதிராக முடுக்கி விட்டுள்ளார்கள்.''

இவ்வாறு நேற்று ஜா எல நகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய மடுகலவாக சுபத்திரதேரோ தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி ஏற்பு நினைவு வைபவத்தை எதிர்த்து அன்னையர் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வமத கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# லெப்டினன்ட் வெள்ளைத்தேவன்

யாழ்ப்பாணத்தில் 1-1 1993 அன்று சுகவீனம் காரணமாக லெப்டினன்ட் வெள்ளைத்தேவன் (கனகசபை ஜெயதாசன் சந்தை வீதி, சங்கானை) என்னும் விடுதலைப்

[4-ம் பக்கம் பார்க்க]

# நெல்லியடி பெண்மணி கனடாவில் பலி

(கொழும்பு)

கனடாவில் தனது பிள்ளைகளிடம் சென்ற நெல்லியடியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வாகன விபத்தில் சிக்கி மரணமானார்.

திருமதி கதிர்காமநாதன் சரஸ்வதி (55) என்பவரே இவ்வாறு அகாலமரணம் அடைந்

[4-ம் பக்கம் பார்க்க]

# பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் செலவு செய்தது மூவாயிரம் வழங்கப்பட்டது ஐம்பது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொட்டகலைக்குச் சென்ற பயிலுனர் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஐம்பது ரூபா போக்குவரத்துச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடுப்பகுதியில் கொட்டகல பகுதியில் யாழ் மாவட்ட பட்டதாரிகளுக்கு பயிலுனர் ஆசிரியர் பதவி வழங்கலுக்கான பயிற்சி வழங்கப்பட்டது தெரிந்ததே.

இப்பயிற்சிக்கு சமுகமளிக்கும் பட்டதாரிகளுக்கு போக்குவரத்து செலவு வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது.

யாழ். மாவட்டத்திலிருந்து சுமார் 250 பேர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். இவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று திரும்ப போக்குவரத்திற்கு மட்டும் சுமார்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# புலமைப்பரிசில் வழங்கலில் பெற்றோர் அதிருப்தி

(கொழும்பு)

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் வருட வருமானம் ஆறாயிரம் ரூபாவுக்கு குறைவாகப் பெறுபவர்களின் பிள்ளைகளுக்கே புலமைப் பரிசில் நிதி வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் பெருமளவு மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையும் அரசினால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஆறாயிரம் ரூபா என்ற வருமான விதி அதாவது மாதாந்த வருமானம் 500 ரூபா என்ற விதி இன்றைய காலகட்டத்தில் ஏற்க முடியாததொன்றாகும். இன்று எந்த ஒரு தொழிலாளியும் வருடமொன்றிற்கு வருமானமாக ஆறாயிரம் ரூபாவுக்கு மேல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இளாலி கடற்பரப்பில் நேற்றுப் பயணிகள்மீது சூடு

[யாழ்ப்பாணம்]

இளாலி கடற்பரப்பில் பயணிகள் படகை நோக்கி நேற்று இரவு கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்

நேற்று இரவு ஆலங்கேணிப் பகுதியிலிருந்து இளாலி நோக்கி வந்த படகுகளை நோக்கி 7.30 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் இருந்து துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டது

இதனால் நேற்றைய பிரயாணம் இடையில் தடைப்பட்டது. கொழும்பு நோக்கி சென்ற பிரயாணிகள் ஏமாற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# "தமிழோசை" வெளியீட்டு விழாவில் கலைஞர்கள் கௌரவிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற 'தமிழோசை' வீடியோப் பிரதி வெளியீட்டு விழாவில், இப்படத்தயாரிப்பில் பங்கேற்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளரும், விடுதலைப் புலிகள் இயக்கமூத்த உறுப்பினருமான வெ இளங்குமரன் விருதுகள் வழங்கிக் கௌரவித்தார்.

யாழ். மாவட்ட விசேட தளபதியான தமிழ்ச்செல்வன் மங்களவிளக்கேற்றி வைக்க ஆரம்பமான இவ்விழாவிற்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமை வகித்தார். முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட 'தமிழோசை' வீடியோப் படத்தில் சிறப்பாக நடித்த சிறுமிக்கு விசேட தளபதி சிறப்பு விருது ஒன்றையும் வழங்கிக் கௌரவித்தார்.

இவ்வைபவத்தில் வெளியீட்டுரை நிகழ்த்திய முல்லைமாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழன்பன் தமது உரையில்,

"ஒரு தேசத்தின் கண்களாகவும் காலத்தின் குரலாகவும் விளங்கும் கலைஞர்கள் பேசா மடந்தைகளாக இருக்க முடியாது. இருக்கவும்கூடாது ஒரு நாட்டினதும், இனத்தினதும் இழிநிலை கண்டு கொதித்து எழுந்து போராட அந்த மக்களை எழுச்சி கொள்ள வைக்க கலைஞர்களாலும், இலக்கியவாதிகளாலும் முடியும். அத்துடன் எமது போராட்டம் எப்படி நடந்தது எந்தளவுக்கு இரத்தத்தையும் தற்கொடைகளையும் கொடுத்து இந்த நாடு விடுதலை செய்யப்பட்டது என்பதை உலகுக்கும், அடுத்த தலைமுறைக்கும், கலைஞர்களே தமது படைப்புகள் மூலம் எடுத்துச் சொல்ல வேண்டும். கலைஞர்கள் என்போர் ஏதோவான த்திலிருந்து குதித்தவர்கள் அல்ல; அவர்களும் இந்த மண்ணின் பிரதிநிதிகளே அவர்களுக்கும் ஒரு தார்மீகக் கடன் உண்டு. தர்மத்தின் குரலாக அவர்களது குரல் இங்கிருந்து ஒலிக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்

விடுதலைப்புலிகள் இயக்க மூத்த உறுப்பினரான தேவர், நிதர்சனம் பொறுப்பாளர் பரதன், பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதிகள் சோ. கிருஷ்ணராசா, சிவலிங்கராசா மற்றும் ஆசிரியர்களான செம்பியன் செல்வன் அருணாசலம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் எழுபத்து நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது 1993ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக க. கந்தையாவும் செயலாளராக த. கனகலிங்கமும், பொருளாளராக லோ. சேகரனும் கலைக்குழுப் பொறுப்பாளராக கா. லோகேஸ்வரனும். விளையாட்டுக்குழுப் பொறுப்பாளராக க. நவரத்தினமும், பொது அபிவிருத்தி சுகாதாரம், விவசாயம் என்பவற்றிற்கு பொறுப்பாக ம. கதிர்காமநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின், ஊழியர் நலன்புரிச் சங்கம் நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. இச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது தலைவராக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எல். கதிரவேற்பிள்ளையும். உப தலைவராக மகப்பேற்று வைத்திய நிபுணர் இ. குழந்தைவேலுவும் செயலாளராக தாதிகள் மேற்பார்வையாளர் திரு. ச பாலகிருஷ்ணனும், பொருளாளராக பிரதம லிகிதர் ச. தேவராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (25)

★

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் சந்தபுராணவீதியில் உள்ள இல்லமொன்றில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக திரு கு. சண்முகலிங்கம், உபதலைவராக திரு த சுந்தரம்பிள்ளை, செயலாளராக திரு. வி. கந்தசாமி, உபசெயலாளராக திரு. க. துரைசிங்கம், பொருளாளராக திரு. அ. வசந்தகுமார் ஆகியோருடன் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டதோடு இச் சங்கத்திற்கு 'இராஞ்சியபதி' கிராம அபிவிருத்திச் சங்கம் என பெயர் சூட்டப்பட்டது. (22)

## உலர் உணவு விநியோகம்

சென்ற வருடம் டிசம்பர் மாதத்தின் இறுதி இரண்டு வாரங்களுக்குமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கென யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி சகல பல நோக்கு சங்கங்களுக்கும் உணவுப் பொருள்களை விநியோகித்துள்ளது.

இந்நிவாரணப் பொருள்களில் அரிசி, மா சீனி, மைசூர்ப் பருப்பு, உழுந்தும் பருப்பு, பால்மா என்பன அடங்குகின்றன. (பா)

## கற்பிட்டியில் கடல் தொழிலுக்கு படையினர் அனுமதி மறுப்பு

கற்பிட்டி கடலில் கடலட்டை மற்றும் சங்கு பிடிக்கப்படுவதற்கு அனுமதிகோரப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கவில்லை எனக் கூறப்படுகிறது

இதனால் சுமார் நானூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மீனவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்கள் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

## பாடசாலைத் தவணைகள் கல்வி அமைச்சால் அறிவிப்பு

(கொழும்பு)

கல்வி உயர்கல்வி அமைச்சு 1993 ஆண்டு கல்வித் தவணைகள் பற்றிய விபரங்களை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதன்படி 1993 தவணைகள்:-

★ முதலாம் தவணை:- 1993 ஜனவரி4 முதல் ஏப்பிரல் 7ஆம் திகதி வரை.

★ இரண்டாம் தவணை:- 1993 மே மாதம் 3-ம் திகதி முதல் ஜூலை மாதம் 30-ம் திகதி வரை.

★ மூன்றாம் தவணை:-

★ 1993 செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 3-ம் திகதிவரை.

மேலும் அந்தந்தக் கல்வி அமைச்சுக்களுக்கு மாகாணங்களின் தேவைகளுக்கேற்ப கீழ்காணும் விதிகளுக்கு அமைய கால அட்டவணைகளை மாற்றம் செய்வதற்கும் கல்வி அமைச்சு அனுமதித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ குறைந்த பட்சம் 190 நாட்கள் பாடசாலை நடாத்துதல்.

★ க.பொ.த உயர்தர பரீட்சைக்கு ஆகஸ்ட் விடுமுறை.

★ க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்கு டிசம்பர் விடுமுறை.

## மாவீரர் நினைவுகூரல்

நவம்பர், டிசம்பர் மாதங்களில் வீரச்சாவடைந்த தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களான லெப். சந்திரன், லெப். குமரன், வீரவேங்கைகள் அப்பு, சிறி ஆகியோரை நினைவு கூர்ந்து நடாத்தப்பட்ட 'நினைவஞ்சலிக் கூட்டம்' சென்ற மாதம் 31ஆம் திகதி [31-12-92] வியாழக்கிழமை இரவு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது. தீவக பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சேரலாதன், தீவக மாவீரர் செயற்பாட்டுக் குழு உறுப்பினர் திரு. ப. லைாலிங்கம் ஆகியோரின் நினைவுரைகளுடன் வில்லிசை, 'ஒமுதினியின் குமுறல்' நாட்டிய நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (22)

## ஏகாதசி விரதவிழா

[குருநகர்]

அலவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 4-ம் திகதி திங்கட் கிழமை மார்கழி ஏகாதசி விரதவிழா சிறப்பாக நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது


## வரி விளம்பரம்

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக்கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஓடர்க்கு செய்து தரப்படும்.

கோவிந்த பிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (3884)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பகுதிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

### வியாபாரிகளுக்கு

இமிரேசன் கோல்கவரின் நகைகள், மணப்பெண்களின் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், வெளிநாட்டு, உள்நாட்டு அழகுசாதன பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3902)

### சித்திரம்

க. பொ. த (சா/த) 1992, 1993 பரீட்சை விண்ணப்பதாரிகளுக்குப் பாடத்திட்டத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட "சித்திரம் 11" ஆக்கம்: 'பசோ' சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். இதற்கு அனுசரணையான 'அலங்காரங்களும் விளக்கப் படங்களும்' தொகுதி I ஐயும் கேட்டு வாங்குங்கள். (3894)

### சங்கீதம்

வட இலங்கைச் சங்கீதசபை இரண்டாந்தரப் பரீட்சை பாடத் திட்டத்திற்கமைய சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த "சங்கீதம் - வினா விடை" அனைவருக்கும் பயன்படும். எங்கும் கிடைக்கும். (3903)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

O/L ஆண்டுகள் 9,10ற்கான மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன

O/L DAY CLASSES

ஆரம்பம் 5-1-1993

காலை 8.00 மணி

(சி-5698)

## தேவை

அச்சுக் கோப்பாளர்கள்

புத்தகம் கட்டுபவர்கள்

முன் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் 06-01-1993 புதன்கிழமை காலை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

சாந்தி இல்லம்,
டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [3898]

## தேவை

மொழிபெயர்ப்பாளர்கள்

1. இலத்திரனியல்
2. தொழில் நுட்பம்

திறமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 10-01-1993 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.


## நினைவு கூருகின்றோம்..

1993-01-03

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை-மூதூர், பள்ளிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

★ சுரேஷ் (வை. சுதேசராசா - சம்பூர், மூதூர் - திருக்கோணமலை)

இதே ஆண்டு சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்புத் தொலைத்தொடர்பு நிலைய ஊழியரான தமிழ்ப் பொதுமகன்.

1987-ம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி மூதூர் கடற்கரைச் சேனைப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

★ கிட்ணன் (சிவசேகரம் கிருஸ்ணராசா - கட்டைப் பறிச்சான் மூதூர்- திருக்கோணமலை)

★ குணம் (இராசரத்தினம் குணரத்தினம் - சேனையூர், மூதூர் - திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு கொழும்பில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட

1993 பரீட்சை வினாத்தாள்களுக்குப் பாடத்திட்டத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட "சித்திரம் 11" ஆக்கம்: 'யசோ' சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். இதற்கு அனுசரணையான 'அலங்கார ங்களும் விளக்கப் படங்களும்' தொகுதி I ஐயும் கேட்டு வாங்குங்கள். (3894)

## சங்கீதம்

வட இலங்கைச் சங்கீதசபை இரண்டாந்தரப் பரீட்சை பாடத்திட்டத்திற்கமைய சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த "சங்கீதம் - வினா விடை" அனைவர்க்கும் பயன்படும். எங்கும் கிடைக்கும். (3913)

## பெற்றுக்கொள்ளவும்

31-12-92 அன்று சத்தியா நகைத் தொழிலகத்தில் (176/5 கஸ்தூரியார் வீதி) ஒரு தங்கநகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெறவும். [3911]

## திருவாசக முற்றோதல்

சுந்தர்மடம் - ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்த மடத்தில், திருவாசக முற்றோதலும், சொற்பொழிவுகளும், குருபீடாதிபதி, ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் அருளாசியுடன் கடந்த புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

9-1-93 சனிக்கிழமை வரை தினமும் மாலை 3 30 மணி முதல் 5-30 மணிவரை இடம்பெறவுள்ளன.

## ராஜினாமா

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் இராமநாதன் அக்கடமி வாய்ப்பாட்டுப் பிரிவு இணைப்பாளர் சங்கீத பூஷணம் என். பதிமலிங்கம் தனது இணைப்பாளர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இராமநாதன் அக்கடமியில் இசை, வாய்ப்பாட்டு, பண்ணிசை, நாட்டியம் என நான்கு பிரிவுகள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 5-ம் திகதி காலை 9.00 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

சங்கத்தின் தலைவராக திரு. கு. சண்முகலிங்கம், உபதலைவராக திரு த சுந்தரம் பிள்ளை, செயலாளராக திரு. வி. கந்தசாமி, உபசெயலாளராக திரு. க. துரைசிங்கம், பொருளாளராக திரு. இ. வசந்தகுமார் ஆகியோருடன் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டதோடு இச் சங்கத்திற்கு 'இராஞ்சியபதி' கிராம அபிவிருத்திச் சங்கம் என பெயர் சூட்டப்பட்டது. (22)

## நந்தி அறோட்டுமா

NANDHI ARROW ROOT POWDER

தரம் உயர்ந்ததும் கலப்படம் அற்றதுமான தூய அறோட்டுமா யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்து உயிரியல் துறையினரால் போதிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வயிற்றோட்டத்துக்கு மருந்தாகவும் சிறுவர்கள், நோயாளர்களுக்கான சிறந்த சத்துணவாகவும் அறோட்டுமா பயன்படுகின்றது. கேக், புடிங் போன்றவை தயாரிப்பதற்கும் இதனைப் பயன்படுத்தலாம்.

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

### கூகைநீறு

போதிய அளவு கூகை நீறு கைவசம் உண்டு. கொள்ளளவைக் குறிப்பிட்டு எழுதவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

1. பீடாதிபதி,
   விவசாயபீடம்,
   யாழ். பல்கலைக்கழகம்,
   கிளிநொச்சி.

2. பதிவாளர்
   யாழ் பல்கலைக்கழகம்,
   திருநெல்வேலி.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி/5696)

புத்தகம் கட்டுபவர்கள்

முன் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் 06 - 01 - 1993 புதன்கிழமை காலை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

சாந்தி இல்லம்,
டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [3898]

## தேவை

மொழிபெயர்ப்பாளர்கள்

1. இலத்திரனியல்
2. தொழில் நுட்பம்

திறமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 10 - 01 - 1993 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் 190
மே/பா சமநாதம், [3897]


நகர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சேரலாதன், தீவக மாவீரர் செயற்பாட்டுக் குழு உறுப்பினர் திரு. ப. லைாலங்கம் ஆகியோரின் நினைவுரைகளுடன் வில்லிசை, 'முதிவின் குமுறல்' நாட்டிய நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (22)

## ஏகாதசி விரதவிழா

[குருநகர்]

அலைவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 4-ம் திகதி திங்கட்கிழமை மார்கழி ஏகாதசி விரதவிழா சிறப்பாக நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது

விசேட பூஜைகள், அபிஷேகங்களுடன் மூர்த்தி வீதி எழுந்தருளி அருள்பாலிப்பார். [21]



# UNKCO
## Computer Centre

★ **BASIC**
Introduction to Data processing, programming with file handling, graphics and music

★ **dBASE III+**
Commercial and Administration programming

★ **LOTUS 1 - 2 - 3**
Accounting, Statistical and graphics

★ **WORD PROCESSING**
Wordstar 5 5 word perfect and Tamil word processing

ஆரம்பம் WEEK DAY 6 - 1 - 93
WEEK END 9 - 1 - 93

❋ வடமாகாணத்தில் கடந்த ஆறு வருடங்களில் கூடிய தொகைமாணவர்கள் ***Computer*** கல்விகற்ற ஒரே நிறுவனம்

❋ கூடிய நேர செய்முறைப் பயிற்சி (***Practicals on IBM - PC***)

மேலதிகவிபரங்களுக்கு :

No 37, CLOCK TOWER ROAD, JAFFNA
(வெலிங்டன் சந்திக்குவடக்குப் புறமாக மேல்மாடியில்) [சி 5697]

## நினைவு கூருகின்றோம்..
## 1993-01-03

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை-மூதூர், பள்ளிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

★ **சுரேஷ்** (வை. சுதேசராசா - சம்பூர், மூதூர் - திருக்கோணமலை)

இதே ஆண்டு சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்புத் தொலைத்தொடர்பு நிலைய ஊழியரான தமிழ்ப் பொதுமகன்.

1987-ம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி மூதூர் கடற்கரைச் சேனைப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

★ **கிட்ணன்** (சிவசேகரம் கிருஸ்ணராசா - கட்டைப் பறிச்சான் மூதூர்- திருக்கோணமலை)

★ **குணம்** (இராசரத்தினம் குணரத்தினம் - சேனையூர். மூதூர் - திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு கொழும்பில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

**கணேசலிங்கம் ஜீவகுமார் - ஜீவன்** ('செல்வகிரி' சிவன் வீதி, உரும்பராய் கிழக்கு - யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு- கிரான் கின்னையடிப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1990ஆம் ஆண்டு அம்பாறை- கல்முனைக்குடியிருப்புப்பகுதியிற் தேசவிரோத "ஜிகாத்" குழுவினரால் கொலை செய்யப்பட்ட-

**ஆதம்** (எஸ். எம். ஆதம்பாவா- 627, கடற்கரை வீதி, சாய்ந்தமருது அக்கரைப்பற்று- அம்பாறை)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நடேஷ்** (தம்பு சிங்கராசா - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி- யாழ்ப்பாணம்)

**2-ம் லெப். பாபு** [இளையதம்பி பாபு- கல்வயல், சாவகச்சேரி - யாழ்ப்பாணம்]

1991ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக மிதிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த-

**நவம்** (தங்கவேல் சிவக்குமார் - திருக்கோணமலை)

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலையிலிருந்து மண்முனைத்துறைக்கு ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகையில் அதனை முறியடிக்கும் நோக்கமாக கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி முகாம்களிலிருந்து வந்து சுற்றிவளைக்க முனைந்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதக் குழுவினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் வினோத் - சர்மிலராஜ்** (முருகேசு அசோகன் - கொக்கட்டிச்சோலை -மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர், ஐயங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**கிளைமன்** (மாமாங்கம் சண்முகநாதன் - ஐயங்கேணி ஏறாவூர் - மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5695]

### சிந்தனைக்கு

அளவற்ற சொற்களுக்கு, கேளாக் காதுகள்.
-ஸ்பானியப் பழமொழி

பயனற்ற சொற்களால், உலகின் செவி செவிடாகி விடுகிறது.
-அன்னை (அரவிந்த ஆச்சிரமம்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 03-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05


## கருத்தொருமைப்பாடு உருவாக்குவது யார்?

மூன்றாம் உலகநாடு ஒன்றில் புரையோடிப் போன பிரச்சினை ஒன்றிற்கு கருத்தொருமைப் பாட்டின் மூலம் தீர்வு காணுதல் என்பது இலகுவானதொன்றல்ல. 'வேற்றுமையில் ஒற்றுமை காணுதல்', 'கருத்தொருமைப்பாடு மூலம் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்' என்பன உயர்வான பண்புகள்தான். ஆனால் நாட்டின் நலன் என்பதை விட ஆட்சி அதிகாரத்திற்கான அதிகாரப் போட்டியும், மோதலும் நிறைந்த மூன்றாம் உலக நாடுகளில் இவ் உயர்வான பண்புகளை அரசியல்வாதிகளிடம் கண்டுகொள்வது அபூர்வமான தொன்று.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி தனது புத்தாண்டுச் செய்தியில், "வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு கருத்துடன்பாட்டின் மூலம் தீர்வு காண இப்புத்தாண்டில் உறுதி பூணுவோம்" என கேட்டுக் கொண்டுள்ளார். இதேவேளை புதுவருடத்திற்கு முதல்நாள் கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி பிரேமதாசா "வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும். தத்தமது புத்திக் கூர்மையை பிரயோகித்து தீர்வுக்கு வழிகாட்ட வேண்டும்" எனவும் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறான தொனியில் திரு. பிரேமதாசா பேசுவது இதுதான் முதல் தடவையல்ல. கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக கருத்தொருமைப்பாடு. சமரசப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என அவர் மேடைகளில் முழங்கி வருகின்றார். அத்தோடு, யுத்தத்தினால் நாட்டின் செல்வம் அழிகின்றது, பாதிக்கப்படுகின்றது. யுத்தம் நின்றால் ஆயிரக்கணக்கான கோடி ரூபா அபிவிருத்தி நிதிக்கு ஒதுக்க முடியும் எனவும் கூறிவருகின்றார்.

ஆனால் திரு. பிரேமதாசா சொல்வதொன்றாகவும், செய்வதொன்றாகவும் உள்ளது. அவர் ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. ஆனால் திரு. பிரேமதாசா தனது சார்பிலேயோ அன்றி ஐ. தே. கட்சியின் சார்பிலேயோ, அன்றி அரசாங்கத்தின் சார்பிலேயோ தீர்விற்கான எந்த விதத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. எதிரணியினர் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கட்டும் அதில் அரசியல் லாபம் தேடிக் கொள்ளலாம் எனக் காத்திருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென

## காங்கிரசுடன் தி.மு.க. கூட்டணி என்னும் பேச்சுக்கே இடமில்லை

(திருச்சி) - மு. கருணாநிதி

காங்கிரசின் ஆசாரத்தை நாம் ஏற்கனவே அனுபவித்து இருக்கிறோம். எனவே காங்கிரஸ் - தி. மு. க கூட்டணி என்ற பேச்சுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று தி. மு. க தலைவர் மு.கருணாநிதி திருச்சியில் நிருபர்களுக்கு அளித்தபேட்டியில் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது; முதல்வர் ஜெயலலிதா மீது 18 குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் கவர்னரிடம் அளிக்கப்பட்டுள்ளது. அது நிரூபிக்கப்படுமானால் அவர் தானாகவே பதவியை ராஜினாமா செய்ய வேண்டிவரும்.

பாபர் மசூதியை இடிக்க பாரதிய ஜனதாவுக்கு என்ன பங்கு உண்டோ அதே பங்கு பாபர் மசூதியை காக்கத்தவறிய காங்கிரசுக்கும் உண்டு. இந்த குற்றசாட்டில் இருந்து காங்கிரஸ் தப்பமுடியாது

உ. பி. யில்சட்டத்தை ஒழுங்காகக் காக்க முடியாததால் அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது. அந்த அரசு கலைக்கப்பட்டது உண்மை. ஆனால் பா. ஜ. கட்சி ஆட்சி செய்த மற்ற மூன்று அரசுகளைக் கலைத்தது தவறு.

தமிழகத்தில், ஆட்சியைக் கலைக்க ஒரு போதும் நாம் சம்மதிக்க மாட்டோம். எமக்குரிய தனித்தன்மையான கொள்கைகளை மற்றக் கட்சிகளுக்காக நாம் விட்டுக் கொடுக்கவும் மாட்டோம்.

காங்கிரசுடன் உறவு குறித்து

## ஜெயலலிதா திட்டவட்டமான முடிவை அறிவிக்கவேண்டும்

[சென்னை] - வாழப்பாடி

காங்கிரஸ் கட்சியுடனான உறவு குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரான முதலமைச்சர் ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரான வாழப்பாடி கே. இராமமூர்த்தி கடந்த செவ்வாயன்று கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் காங்கிரசிற்கும் அ. தி. மு. க, விற்கும் இடையேயான கூட்டணி உறவு வலுவுள்ளதாகவே இருக்கின்றது என்று காங்கிரசின் தலைவரான பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்திருக்கின்றதைச் சுட்டிக் காட்டி கூட்டணி உறவைப் பொறுத்த வரை காங்கிரஸ் எதனையும் தன்னிச்சையாகச் செய்யாது எனக் குறிப்பிட்டார்.

## பிரிட்டன் உள்துறை அமைச்சர் இந்தியாவிற்கு விஜயம்

(டில்லி)

பிரிட்டனின் உள்துறை அமைச்சரான கென்னத் கிளார்க் இந்நாள் உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லியை வந்தடைந்தார்.

அவர் இந்தியாவின் காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகள் பற்றியும் ஆசிய நாட்டவர் எதிர்நோக்கும் குடியேற்றப் பிரச்சினை பற்றியும் இந்தியத் தலைவர்களுடன் பேச இருப்பதாகக் கூறப்படுகிறது.

## வர்மாகமிஷன் தீர்ப்பு குறித்து வாழ்ப்பாடி பதில்தர வேண்டும்

### திண்டிவனம் ராமமூர்த்தி குற்றச்சாட்டு

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் கொலை தொடர்பாக வர்மா கமிஷன் கூறிய குற்றச்சாட்டிற்கு வாழப்பாடி ராமமூர்த்தி பொறுப்பு ஏற்க வேண்டும் அத்துடன் அதற்கான விளக்கத்தினையும் அளிக்கவேண்டுமென இந்திரா காங்கிரஸ் எம். பி. திண்டிவனம் ராமமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக அவர் வழங்கிய பேட்டி வருமாறு:- ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக வர்மா கமிஷன் அறிக்கையும், கண்டனங்களும் அரசு அதிகார வர்க்கம், காங்கிரஸ் கட்சி ஆகியவை எங்கெங்கே தவறி இருக்கின்றது என்பதை கடுமையாக சுட்டிக் காட்டி இருக்கின்றது. அதற்கான பொறுப்பினை யாரும் உதறித் தள்ளிவிட முடியாது. ஆனால், வர்மாக்கமிஷன் இன்னொன்றையும் தெளிவு படுத்தி இருக்கின்றது. இந்த மூன்று அமைப்புக்களும் எச்சரிக்கையாக இருந்திருந்தால் ராஜீவ் காந்தியை படுகொலை செய்ய முனைந்தவர்கள் அவரை நெருங்க விடாமல் தவிர்த்திருக்கலாம் என்பது தான் அது.

ஜனாதிபதி ஆட்சியின் கீழ் மாநில கவர்னர் முழு அதிகாரம் பெற்றிருந்தால் பாதுகாப்பு நடவடிக்கைகள் அத்தனைக்கும் அவரே பொறுப்பு ஆவார். அதே சமயம் ராஜீவ் காந்திக்கு கொடுத்திருக்க வேண்டிய தனி பாதுகாப்பை வேண்டாமென்று சட்ட பூர்வமாகச் செயற்படுத்தியது வி. பி. சிங் ஆட்சி. அதனைத் தொடர்ந்து வந்த சந்திரசேகர் ஆட்சியும் அதே நடைமுறையைத்தான் கடைப் பிடித்திருந்தது.

தமிழக காங்கிரஸ் கட்சி எங்கெல்லாம் தவறி இருக்கின்றது என்பதை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கின்றது. அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியதும், விளக்கம் தர வேண்டியதும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைமையின் (வாழப்பாடி ராமமூர்த்தி) கடமையாகும்.

பாராளுமன்றத்தின் முலம் மக்கள் மத்தியில் வைக்கப்பட்டுள்ள வர்மா கமிஷன் அறிக்கை யார் யாரை சுட்டிக் காட்டுகிறதோ அவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு முதலில் பதில் சொல்லியே ஆகவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## இந்து மதவாதிகளின் எழுச்சியால் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் அச்சம்

[டில்லி]

இந்தியாவின் சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள் மத்தியில் இந்து அடிப்படை வாதத்தினால் ஏற்பட்ட பலாத்காரம் காரணமாக மதச்சார்பின்மை கொள்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அச்சம் தோன்றியிருப்பதாக கூறப்படுகின்றது.

இதையடுத்து தங்கள் மத உரிமைகளும் வணக்க ஸ்தலங்களும் பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழியை அளிக்குமாறு மத்திய அரசிடம் இந்தியாவில் வாழும் இரண்டு கோடியே முப்பதுலட்சம் கிறிஸ்தவர்கள் சார்பிலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும்வட இந்தியபுரட்டஸ்தாந்து திருச்சபையின்பொதுக் காரியதரிசியான வண பிரிதாம் சந்திராம் கூறுகையில்,

கடந்த ஆறாம் திகதியன்று அயோத்தியாவில் மசூதி இடிக்கப்பட்டதன் பின்னர் இந்து சமயத்தின் சகிப்புத்தன்மை குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருப்பதாகவும், இந்து சமூகத்திற்குள் வேர் விட்டிருக்கும் பாசிச சக்திகளும், அடிப்படைவாத சக்திகளும், பலாத்காரத்தை தூண்டும் வலிமை பெற்றுள்ளன என்றும் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவிடம் கையளித்த மகஜரில் தாம்சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிவித்தார்,

அத்துடன் இத்தகைய சம்பவங்கள் சிறிய அளவில் இருந்த போதிலும் கூட இந்து தேசிய வாதமும், அதன் அரசியல் ஆதரவு சக்தியான பாரதிய ஜனதாக் கட்சியும் எழுச்சி கண்டிருப்பது நெருக்கடி அதிகரித்து வருவதைக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

## அணுவாயுத குறைப்பு ஒப்பந்தம் புஷ்-யெல்சின்மாஸ்கோவில்கைச்சாத்து

(மாஸ்கோ)

போரி முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதங்களை குறைப்பதற்கு வழி செய்யும் இரண்டாவது ஸ்டார்ட் உடன்படிக்கையில் அமெரிக்க- ரஷ்ய அதிபர்கள் இன்று மாஸ்கோவில் வைத்துக்கைச்சாத்திடவுள்ளனர். உலகிலேயே மிகவும் பயங்கரமான அணுவாயுதங்களை ஒழிப்பதற்கும் உலகிலேயே மிகவும் பயங்கரமாக அமெரிக்காவிடமும், ரஷ்யாவிடமும் இருக்கும் அணு ஆயுதங்களை மூன்றிலிரு பங்

வது ஸ்டார்ட் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்ததுடன் தனது அணு ஆயுதங்களை அழிப்பதானால் மேற்கு நாடுகள் நூற்றியம்பது கோடி டாலர்கள் நட்டஈடு தரவேண்டுமெனச் கோரியிருந்தது தெரிந்ததே.

கென்யாவில்

## பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகள் தெரிவு

[ஜெனிவா]

ஐ.நா. நாடுகள் பாதுகாப்பு ... துவ நாடுகளாக இரண்டாண்டுகளுக்குப் பதவி வகிக்கும்.

## இரு நாடுகளாக பிரகடனம்

(பிலிப்பைன்ஸ்)

'செக்', 'சிலோவாக்கிய' என இரண்டு நாடுகள் சுதந்திரக் குடியரசுகளாக கடந்த வியாழன் இரவு பிரகடனப் படுத்தப்பட்டன.

முதலாம் உலக யுத்தத்தின் போதுசெக்கோசிலோவாக்கிய என ஒன்றாக இணைக்கப்பட்ட இவ் இரு பிராந்தியங்களும் சமாதானமான முறையில் இவ்வாறு தனித்தனி நாடுகளாக பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளன.

இவ்வாறான தொனியில் திரு. பிரேமதாசா பேசுவது இதுதான் முதல் தடவையல்ல. கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக கருத்தொருமைப் பாடு, சமரசப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என அவர் மேடைகளில் முழங்கி வருகின்றார். அத்தோடு, யுத்தத்தினால் நாட்டின் செல்வம் அழிகின்றது, பாதிக்கப்படுகின்றது. யுத்தம் நின்றால் ஆயிரக்கணக்கான கோடி ரூபா அபிவிருத்தி நிதிக்கு ஒதுக்க முடியும் எனவும் கூறிவருகின்றார்.

ஆனால் திரு. பிரேமதாசா சொல்வதொன்றாகவும், செய்வதொன்றாகவும் உள்ளது. அவர் ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. ஆனால் திரு. பிரேமதாசா தனது சார்பிலேயோ அன்றி ஐ. தே. கட்சியின் சார்பிலேயோ, அன்றி அரசாங்கத்தின் சார்பிலேயோ தீர்விற்கான எந்த விதத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. எதிரணியினர் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கட்டும் அதில் அரசியல் லாபம் தேடிக் கொள்ளலாம் எனக் காத்திருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென தனது காலத்தில் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டதென்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதென்றும் திரு பிரேமதாசா கூறிக்கொள்ளலாம். ஆனால் அவற்றை திரு. பிரேமதாசா காலம் கடத்துவதற்குப் பயன்படுத்தியுள்ளாரே ஒழிய தீர்விற்கான ஓர் ஊடகமாகப் பயன்படுத்தவில்லை. அவ்வாறு இவற்றை அவர் பயன்படுத்த எண்ணியிருப்பின் அவற்றின் முன் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருப்பார், கருத்தொற்றுமை ஒன்றை ஏற்படுத்த முற்பட்டிருப்பார்.

கருத்தொருமைப்பாடு என்பது தானாக உருவாகி வரும் ஒன்றல்ல. அவற்றிற்கென தீவிரமாக உழைக்க வேண்டும். தமது கருத்தை வலியுறுத்தி ஏனையவர்களையும் தனது வழிக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும். இதைவிடுத்து ஓர் அமைப்பை உருவாக்கி விடுவதனால் மட்டும் கருத்தொற்றுமை உருவாகிவிடமாட்டாது.

அண்மையில் கனடாவில் சிறுபான்மையினருக்கு உரிமை வழங்கவென அரசியல் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தும் நோக்கில் இடம் பெற்ற சர்வசனவாக்கெடுப்பில் 'சட்லொட்டவுண் உடன்படிக்கை' மக்களால் நிராகரிக்கப்பட்டிருக்கலாம். அதற்குப்பல காரணங்களும் இருக்கலாம். ஆனால் இவ் உடன்படிக்கை உருவாவதற்கு கனேடியப் பிரதமமந்திரி எடுத்துக் கொண்ட முயற்சியோ மிகப்பெரியது. தனது அரசியல் எதிர்காலத்தைப் பணயம் வைத்து இம்முயற்சியில் இறங்கினார். பிரச்சினைக்கு கருத்தொருமைப்பாடு காண்பதில் குறிப்பிடக்கூடிய அளவிற்கு அவரால் செல்லவும் முடிந்தது. நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்ற நோக்கில் அவர் மேற் கொண்ட தீவிர முயற்சியே இதற்குக் காரணமாகும்.

இதைவிடுத்து தமது அரசியலில் லாபம் ஒன்றை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படும் திரு. பிரேமதாசா போன்றவர்கள் பேச்சளவில் மட்டும் கருத்தொற்றுமை பற்றிப் குறிப்பிடுவதினால் லாபம் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. பிரச்சினைக்கு சமாதான தீர்வுகாணப்பட வேண்டும் என்ற உண்மையான நோக்கம் திரு. பிரேமதாசாவிற்கு இருக்குமானால் இனப்பிரச்சனைக்கான கருத்தொருமைப்பாட்டை உருவாக்க அவரே முற்பட வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். இல்லாது விட்டால் 365 நாளுக்கொரு தடவை வந்து போகும் புத்தாண்டுகளால் லாபம் எதுவும் விளையாது.

---

பூர்வ பயணமொன்றை மேற் கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லியை வந்தடைந்தார்.

சினை பற்றியும் இந்தியத் தலைவர்களுடன் பேச இருப்பதாகக் கூறப்படுகிறது.

உறுதிமொழியை அளிக்குமாறு மத்திய அரசிடம் இந்தியாவில் வாழும் இரண்டு கோடியே

திறகுள் ... பாசிச சக்திகளும், அடிப்படைவாத சக்திகளும், பலாத்கார

வருவதைக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

---

# அணுவாயுத குறைப்பு ஒப்பந்தம் புஷ்-யெல்ட்சின் மாஸ்கோவில் கைச்சாத்து

(மாஸ்கோ)

போர் முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதங்களை குறைப்பதற்கு வழி செய்யும் இரண்டாவது ஸ்டார்ட் உடன்படிக்கையில் அமெரிக்க-ரஷ்ய அதிபர்கள் இன்று மாஸ்கோவில் வைத்துக் கையெழுத்திடவுள்ளனர். உலகிலேயே மிகவும் பயங்கரமான அணுவாயுதங்களை ஒழிப்பதற்கும் உலகிலேயே மிகவும் பயங்கரமாக அமெரிக்காவிடமும், ரஷ்யாவிடமும் இருக்கும் அணு ஆயுதங்களை மூன்றிலிரு பங்காக்க் குறைப்பதற்கும், இந்த ஒப்பந்தம் வழிசெய்கின்றது.

இதனிடையே உக்ரைன் குடியரசு தன்னிடம் இருக்கும் அணுவாயுங்கள் அனைத்தையும் அழித்து விடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. உக்ரைனின் வெளியுறவு அமைச்சரும், ரஷ்ய வெளியுறவு அமைச்சரும் சந்தித்த போது அணு ஆயுத ஒழிப்பை தீவிரமாக்குவது குறித்து பேச்சுக்களை விரைவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டது. உலகின் மூன்றாவது அணுஆயுத நாடான உக்ரைன் முதலாவது ஸ்டார்ட் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்ததுடன் தனது அணு ஆயுதங்களை அழிப்பதானால் மேற்கு நாடுகள் நூற்றியம்பது கோடி டாலர்கள் நட்டஈடு தரவேண்டுமெனக் கோரியிருந்தது தெரிந்ததே.

## பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகள் தெரிவு

[ஜெனிவா]

ஐ. நா. பாதுகாப்பு சபையின் நிரந்தரஉறுப்புரிமை இல்லாத ஐந்துநாடுகளின் இடத்திற்கு பிரேஸில், பாகிஸ்தான் ஸ்பெயின், நியூசிலாந்து ஜிபோட்டி ஆகியவை தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவை பாதுகாப்பு சபையின் அங்கத்துவ நாடுகளாக இரண்டாண்டுகளுக்குப் பதவி வகிக்கும்.

ஈகுவடோர், சிம்பாப்வே, இந்தியா, ஆஸ்திரியா, பெல்ஜியம் என்பன முதல்திகதி முதல் பாதுகாப்பு சபையின் உறுப்புரிமையை இழந்திருப்பது தெரிந்ததே.

## ஈராக்கிய அதிபருக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

தெற்கு ஈராக்கில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்ட விமான சூன்யப் பகுதியில் விமானங்கள் பறக்க விடுவதை சதாம் உசைன் தவிர்க்க வேண்டும் எனவும், ஐ. நா. தடையை அமுல் நடத்தும் தங்கள் திட உறுதி பற்றி தவறாக எடைபோட வேண்டாம் எனவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஈராக்கை எச்சரிக்கை செய்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தடைப் பகுதியில் ஈராக்கிய விமானம் பறக்க விடப்படுவது பெரும் பிழையாக முடியும் எனவும் எப்-16ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதன் மூலம் சதாம் பாடமொன்றைக் கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இதேவேளை புதிய அதிபராக பொறுப்பேற்கவிருக்கும் பில்கிளின்டனும், புஷ் தெரிவித்த எச்சரிக்கைக்கு ஆதரவு தெரிவித்ததுடன், ஐ. நா. தீர்மானங்களை ஈராக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இதனிடையே ஈராக்கிய எல்லைக்குள் வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈராக்கிய விமானமே சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும், இது அநீதியான நடவடிக்கை எனவும் ஈராக் வர்ணித்திருப்பது தெரிந்ததே.

## கிளர்ச்சிகள் நிறுத்தப்பட்டால் நாடு திரும்ப அனுமதிக்கலாம்

இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

(டெல்அவிவ்)

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நடத்தப்படும் கிளர்ச்சிகள் நிறுத்தப்பட்டால் வெளியேற்றப்பட்ட அனைத்து பாலஸ்தீனியர்களையும் திரும்ப அழைத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது. ஜெருசலேமில் வானொலி மூலம் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ரபீன் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை நாடு கடத்தப்பட்ட நானூற்றுப் பதினாறு பாலஸ்தீனியர்களில் தவறுதலாக அனுப்பப்பட்ட பத்து பாலஸ்தீனியர்களும் ஞாயிறன்று மீண்டும் இஸ்ரேலுக்குத் திரும்பவுள்ளனர்.

மேலும் நாடுகடத்தப்பட்டு பனிமலைப் பகுதியில் சிக்கிப் போயிருக்கும் பாலஸ்தீனியர்களைப் பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைக் குழு மேற்கொண்ட முயற்சி எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை எனவும் இஸ்ரேலும் லெபனானும் தத்தம் பிராந்தியங்களுக்கு ஊடாக இவர்கள் பயணம் செய்ய அனுமதிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

## நேரடிப் பேச்சுக்கள்

(ஜெனிவா)

பொஸ்னியா - ஹெர்சகோவினாவைச் சேர்ந்த போரிடும் குழுக்களின் பிரதிநிதிகள் ஜெனிவாவில் சந்தித்து நேரடிபேச்சுக்களை நடத்த இணக்கம் தெரிவித்துள்ளனர். முன்னாள் யூகோஸ்லாவியாவில் உள்நாட்டுப் போர் வெடித்ததன் பின்னர் இத்தகைய நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. சேர்பிய அதிபர் இந்தப் பேச்சுக்களின் போது புதிய அரசியலமைப்பு உருவாக்குவது பற்றியோசனைகள் கூறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பேச்சு நடத்த தயார்

திபெத்தின் ஆன்மீகத் தலைவரான தாய்லாமா சீனாவுடன் நிபந்தனையற்ற விதத்தில் திபெத்பற்றி பேச்சு நடத்த தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். ஆன்மீகத் தலைவர் தாய்லாமா பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இதனைக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இரு நாடுகளாக பிரகடனம்

(பிலிப்பைன்ஸ்)

'செக்', 'சிலோவாக்கிய' என இரண்டு நாடுகள் சுதந்திரக் குடியரசுகளாக கடந்த வியாழன் இரவு பிரகடனப் படுத்தப்பட்டன.

முதலாம் உலக யுத்தத்தின் போதுசெக்கோசிலோவாக்கிய என ஒன்றாக இணைக்கப்பட்ட இவ் இரு பிராந்தியங்களும் சமாதானமான முறையில் இவ்வாறு தனித்தனி நாடுகளாக பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளன.

கென்யாவில்

## தேர்தல் முடிவையேற்க எதிர்கட்சிகள் மறுப்பு

(நைரோபி)

கென்யாவில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சிகள் மறுத்திருப்பதை தொடர்ந்து அரசியல் மற்றும் அரசியல் சாசன நெருக்கடி தோன்றும் சூழல் உருவாகியுள்ளது.

ஆளும் கட்சி தேர்தல் முடிவைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயல்வதாலும், தேர்தல்களில் இல்லுமுல்லுகள் இடம்பெற்றிருப்பதாலும், இந்நெருக்கடி தோன்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் தலைநகர் நைரோபியில் கூட்டாகப்பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்திய எதிர்க் கட்சியினர் அதிபர் மீண்டும் பதவியேற்பதை தடுக்கப்போவதாக கூறியுள்ளனர்.

## ஊழல் விசாரணையின் நடுவே பிரேஸில் ஜனாதிபதி பதவி துறப்பு

[பிரேஸிலியா]

தம் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களையடுத்து பிரேஸில் ஜனாதிபதி பெர்னான்டோ கொலோர் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

எனினும் செனட் சபையின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே அவர் தமது பதவியைத் துறந்திருப்பதால் விசாரணையை இடைநிறுத்த முடியாது என்று செனட் சபை கூறிவிட்டது.

ஜனாதிபதி கொலோரின் இராஜினாமாவையடுத்துபிரேஸிலில் பல மாதகாலமாக நிலவி வந்த அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்துள்ளது. 43 வயதான கொலோர் தமது பதவியை இராஜினாமாச் செய்த நான்கு மணி நேரத்தினுள் உபஜனாதிபதி இடமார் பிராங்கோ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

## சட்டத்தைத் திருத்த பிரிட்டன்பிரதமர்யோசனை

(லண்டன்)

இங்கிலாந்தின் இளவரசர் சார்ள்ஸ் தமது மனைவியான டயானாவை விவாகரத்துச் செய்தால் அவர் மறுமணம் செய்யக்கூடியவகையில் இங்கிலாந்து திருச்சபையின் சட்டத்தை திருத்துமாறு பாராளுமன்றத்தைக் கோர இருப்பதாக பிரிட்டன் பிரதமர் ஜோன் மேஜர் கூறியுள்ளார்.

மேலும் இது சம்பந்தமான புராதன சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்னும் எலிஸபெத் மகாராணியாரின் விருப்பத்தை, மேஜர் அனுதாபத்துடன் நோக்குவதாகவும் தெரிய வருகின்றது.

ஈழநாதம்

# சம்பள உயர்வுக் கோரிக்கை விசனம் தருவதாகவுள்ளது

## பிரேமதாசா

[கொழும்பு]

ஒரு புறத்தில் யுத்தத்தை தொடருமாறு கோருபவர்கள் மறுபுறத்தில் சம்பள உயர்வை யும் கோரிவருவது விசனம் தருவதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தான் பதவியேற்ற போது பாதுகாப்பு செலவாக எண்ணூறு கோடி ரூபாய் மட்டுமே செலவாகியது. இப்போது அது இரண்டாயிரத்து முந்நூறு கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. நிதி நிலைமை இப்படி இருக்கும் போது யுத்தத்தை தொடர்ந்து நடத்துங்கள் என்று ஆலோசனை கூறுபவர்கள் மறு புறத்தில் சம்பள உயர்வையும் கோருகின்றார்கள் யுத்தத்தை நிறுத்தினால் அவர்கள் கேட்காமலேயே சம்பள உயர்வை வழங்கலாம் என்பதை உணர்வதாக தெரியவில்லை என்றும் தெரிவித்தார்.

# நீர்வேலி தரவையில் இனந்தெரியாத சடலம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தரவைப் பகுதியில் அடையாளம் காணப்படாத ஒரு ஆணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலத்தில் நீல நிறத்திலான சேட்டும் சாம்பல் நிறமான காற்சட்டையும் அணியப்பட்டிருந்தது. சுருள் தலைமயிரும், பரந்த முகத்தையுமுடைய இவரது சடலத்தின் அருகாமையில் நச்சுமருந்துப் போத்தல் ஒன்றும் துவிச்சக்கர வண்டி ஒன்றும் காணப்பட்டது. இந்த வண்டியில் பாசல் ஒன்றில் பச்சைநிறமுடைய சாரம் ஒன்று காணப்பட்டது.

இச் சடலம் தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சடலம் தொடர்பாக தகவல் தெரிவித்தவர்கள் உடனடியாக கோப்பாய் காவல் துறைப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## பொதுக் கூட்டம்

பாண்டியன்தாழ்வு இந்து இளைஞர் மன்றத்தினரின் பொதுக்கூட்டம் இன்று (03-01-1993) பிற்பகல் 4.00 மணிக்கு பாண்டியன் தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

## மார்கழிமாத விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ.சங்கம் தனது எல்லைக்குட்பட்ட மக்களுக்கான மார்கழி (1992) மாத இறுதி இரு வார உலர் உணவு விநியோகத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளது. (88)

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக்கோட்ட அதிபர்கள் கூட்டம் வரும் ஐந்தாம் திகதி காலை பத்து மணியளவில் அலைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் (பி. எம் சி. ஒழுங்கை) நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வேலணைக் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. சிவகுருநாதனின் செய்திக் குறிப்பொன்று கோருகிறது.

## முற்றாக மூழ்கிவிடும் நிலை

கடந்த 21ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் எத்தியோப்பியாவிற்கு றப்பர் ஏற்றிக்கொண்டிருக்கையில் மூழ்கிய கப்பல் மேலும் கடலின் அடித்தளத்தை நோக்கி மூழ்கிக்கொண்டிருப்பதாகவும், தற்பொழுது கப்பலின் சிறிய பகுதி மட்டுமே வெளியில் தெரிவதாகவும், அது முற்றாக மூழ்கிவிடும் நிலையில் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இக் கப்பல் மூழ்குவதை நிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அது வெற்றிதருமா என்று கூறமுடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அ. தி. மு. க. கருத்துக்களுடன் ஒருமைப்பாடு உள்ளதாம்

## பாரதீய ஜனதா பொதுச் செயலாளர்

(சென்னை)

பாரதீய ஜனதாக் கட்சிக்கும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பல விஷயங்களில் ஒருமித்த கருத்து இருப்பதாக பாரதீய ஜனதாக்கட்சியின் பொதுச்செயலாளர் கே. என். கோவிந்தாச்சாரியா தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் பேசினார்.

அ. இ. அ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடனான கூட்டணிபற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில், ஒரு கட்சியுடன் ஒருமித்த கருத்து என்பது கூட்டணிக்கு வழிவகுப்பது ஆகாது என்றும், கூட்டணி அமைவதற்குப் பல்வேறு விஷயங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார் நாட்டின் அரசியலில் நிலைமை நிச்சயமற்றிருப்பதால் தேர்தல் கூட்டணிபற்றி யோசிப்பதற்கு தருணமல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

## பாரதீய ஜனதாவிற்கு செல்வாக்கு அதிகரிப்பு

-கருத்து கணிப்பு தெரிவிப்பு

(டில்லி)

இந்தியா ருடே சஞ்சிகை அயோத்தி விவகாரம் பற்றிக் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தியிருக்கிறது

டிசம்பர் 17ஆம் திகதிக்கும் 23ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒருவார காலத்தில் சுமார் பன்னிரெண்டாயிரம் பேரிடம் கருத்துக்கணிப்பு எடுக்கப் பட்டது.

கணிப்பின்படி எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் செல்வாக்கு இப்போது அதிகரித்து இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. பாபர் மசூதி தாக்கப்பட்டசமயத்தில் அக்கட்சியின் செல்வாக்கு உடனடியாக வீழ்ச்சி அடைந்து காணப்பட்டதாகவும், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் கைது மற்றும் அக்கட்சி ஆட்சி புரிந்தமாநிலஅரசுகள் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன்செல்வாக்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் மாவட்டத்தில்

# மீனவருக்கு கடன் வழங்க வங்கி அதிகாரிகள் தயக்கம்

(மன்னார்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கான கடன் திட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சுமார் இருபத்து மூன்று மில்லியன் ரூபாவும் இன்னமும் மீனவர்களுக்கு வழங்கப்படவில்லையெனத் தெரிய வந்துள்ளது.

ஆசிய அபிவிருத்திவங்கியும், கொழும்பிலுள்ள உயரதிகாரிகளும் இந்தக் கடன் திட்டத்தை அமுல் படுத்தும்படி மன்னார் மாவட்டத்திலுள்ள வங்கி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் மன்னார் பிராந்தியத்தில் மீன்பிடிக்கான கடல் எல்லை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாலும், ஆழ்கடல் தொழில், மற்றும் இரவுநேரத் தொழில் என்பன தடை விதிக்கப்பட்டிருப்பதாலும் தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதால் சந்தை வாய்ப்பு பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறி வங்கிகள் தயக்கம் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக தொழிலை இழந்த மீனவர்கள் மீண்டும் புனரமைப்பு செய்ய முடியாத அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும், நிவாரணத்தில் மட்டுமே தங்கி வாழவேண்டியவர்களாக இருப்பதாகவும் கூறப்படுகிறது

# தனியார் துறைக்கும் 30 சதவீத சம்பள உயர்வு

(கொழும்பு)

அரச வரவு - செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளபடி 30 சதவீத சம்பள உயர்வை தனியார் துறையினருக்கும் வழங்குவதற்கு சம்பள நிர்ணய சபை ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சரால் பரிந்துரைக்கப்பட்ட சம்பள உயர்வைத் தனியார் துறைக்கும் விஸ்தரிக்கும்படி தொழில் அமைச்சர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே சம்பள நிர்ணய சபை படி உயர்வு வழங்குவது பற்றி ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

# கிராமசேவையாளர் கலந்துரையாடல்

பின்வரும் உதவி அரசாங்க அதிபர் நிர்வாகப் பிரிவுகளுக்குட்பட்ட கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை அவ்வப் பகுதி உ.அ.அதிபர் பிரிவுச் செயலகங்களில் நடைபெறவுள்ளது. எனவே, இதில் அவ்வப்பகுதி நிர்வாகப்பிரிவுகளுக்குட்பட்ட சகல கிராம சேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் விடுத்துள்ள அறிவித்தலில் கோரப்பட்டுள்ளது; கலந்துரையாடல்கள் பின்வரும் நேரங்களில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க...

## பாராட்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஐந்து புலமைப் பரிசிற் பரீட்சையில் அகில...

# யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை முடிவு இம்மாத நடுப்பகுதியில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டத்திற்கான முதலாம் ஆண்டுக்குரிய பரீட்சையின் பெறுபேறுகள் மிகவிரைவில் வெளியிடப்படவுள்ளன.

கடந்த வருடம் மேற்படி பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களுக்கான கலை, வர்த்தக துறைகளின் முதலாம் ஆண்டுக்குரிய பரீட்சைகள் நடைபெற்றன. இப்பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் யாவும் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன. இம்மாத நடுப்பகுதிக்கிடையில் மேற்படி பரீட்சை முடிவுகள் பரீட்சார்த்திகளின் கைகளுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## கிளாலி

...றத்துடன் திரும்பினர். இதே வேளை துப்பாக்கி சூட்டுக்கும் மத்தியில் சில படகுகள் கிளாலியை வந்தடைந்தன மேற்படி தகவல்களை கிளிநொச்சியிலிருந்து விபத்து காரணமாக யாழ், போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காகவந்த ஜெகநாதன் [வயது 20] என்பவர் தெரிவித்தார்.


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

**ஆண்டு 9, 10, O/L வரை**
புதிய பிரிவுகள்

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| பாஸ்கரன், | இரா. செல்வவடிவேல், |
| M சிறிதரன் | J. J. கொலின்ஸ் |

ஆரம்பம்: 05-01-93 பி. ப. 3மணி
(சி-5701)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

02.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7473

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

411/1, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்


## ஆண்டு 9, 10, O/L வரை

புதிய பிரிவுகள்

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| பாஸ்கரன், | இரா. செல்வவடிவேல், |
| M சிறிதரன் | J J. கொலின்ஸ் |

**ஆரம்பம்: 05-01-93 பி. ப. 3மணி**

(சி-5701)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



### திருமதி
## மூத்ததம்பி இரத்தினம்மா

தோற்றம்: 20-01-19 3 மறைவு: 5-12-1982

5-12-92 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 4-01-1993 நாளை) எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்
சார்பாக

''லிங்கவாசா'' காரைக்கால் வீதி, (மாவீரர் வீதி) இணுவில்.

மூ சிவலிங்கம் (கிராமசேவையாளர், மல்லாகம், மூ.மகாலிங்கம் (மஸ்கான் கொம்பனி, கொழும்பு) மூ.பஞ்சலிங்கம் (உதவி வைத்திய அதிகாரி அரசினர் வைத்தியசாலை ராஜாங்கனை) மூ. பரமலிங்கம் (பழக்கடை திருநெல்வேலி சந்தை) செ. பரமேஸ்வரி

(3914)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


30 சதவீத சம்பள உயர்வை தனியார் துறையினருக்கும் வழங்குவதற்கு சம்பள நிர்ணய சபை ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சரால் பரிந்து ... வேண்டுகோளை அடுத்தே சம்பள நிர்ணய சபை படி உயர்வு வழங்குவது பற்றி ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

## கிராமசேவையாளர் கலந்துரையாடல்

பின்வரும் உதவி அரசாங்க அதிபர் நிர்வாகப் பிரிவுகளுக்குட்பட்ட கிராமசேவையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை அவ்வப்பகுதி உ.அ.அதிபர் பிரிவுச் செயலகங்களில் நடைபெறவுள்ளது. எனவே, இதில் அவ்வப்பகுதிநிர்வாகபிரிவுகளுக்குட்பட்ட சகல கிராம சேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் விடுத்துள்ள அறிவித்தலில் கோரப்பட்டுள்ளது: கலந்துரையாடல்கள் பின்வரும் நேரங்களில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு - மு ப 10-00 மணி.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர்பிரிவு-மு ப.10-00மணி

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு - பி. ப. 1-00 மணி.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு - மு. ப. 10-00 மணி.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு - பி. ப. 1-00 மணி.

## பாராட்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கையிலும் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்ட சாந்தகுமார் பிருந்தாபனைக் கௌரவிக்கும் முகமாக ஒரு பாராட்டுக் கூட்டமும் தேநீர் விருந்தும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மல்லிகை காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## அகதிமுகாம் இடமாற்றம்

(வவுனியா)

செட்டிகுளம் மகாவித்தியாலயக் கட்டடத்தில் இயங்கி வந்த அகதி முகாம் உடனடியாக ஆண்டான் புளியங்குளத்திற்கு மாற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ். அகதி

தேவையான விதைபொருள்கள் உட்பட ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தயாராக உள்ளன.

(க)

### மட்டு.

பொலிசாரிடம் தமது பெயர் மற்றும் அடையாள அட்டை விபரங்களைப்பதிந்த பின்னர் மற்றொரு கருமபீடத்தில் அடையாள அட்டையை ஒப்படைத்து பதிலாக அவர்களால் வழங்கப்படும் அனுமதி அட்டையைப் பெற்றபின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

### ராணுவ

சேர்ந்த சேனக எதிரிசூரியா, வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பாதுகாப்பு கருதி மேற்படி வீதியில் புதிதாக சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்றை அமைப்பது எனவும், இவ்வீதியின் இருமருங்கிலும் உள்ள காடுகளை அழிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

### புலமைப்

தான் பெறுகின்றார். எனவே கடந்தபல ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட வருமான வரம்பை மாற்றியமைக்க அரசு முன்வரவேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### இநல்லியடி

தவராகும். கொழும்பிலிருந்து விமான மூலம் கனடாவிற்குப் போய்ச் சேர்ந்தவர். அங்கு அவரது வருகைக்காக தனது மோட்டோர் கார் சகிதம் காத்திருந்த மகனுடன் காரில் ஏறி வீடு நோக்கிச் செல்கையில் வீதியில் ஏற்பட்ட விபத்தில் கொல்லப்பட்டார்.

### வீரவணக்கம்

புலிகள் போராளி மரணமடைந்துள்ளார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### சமாதானத்

தப்பிரச்சினையை ஒன்றிணைந்து தீர்க்க முயல வேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்தில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ''தமிழிலும்'' உரையாற்றினார்.

கொழும்பிலுள்ள உயரதிகாரிகளும் இந்தக் கடன் திட்டத்தை அமுல் படுத்தும்படி மன்னார் மாவட்டத்திலுள்ள வங்கி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் மன்னார் பிராந்தியத்தில் மீன்பிடிக்கான கடல் எல்லை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாலும், ஆழ்கடல் தொழில், மற்றும் இரவுநேரத் தொழில் என்பன தடை விதிக்கப்பட்

### கிளாலி

றத்துடன் திரும்பினர். இதே வேளை துப்பாக்கி சூட்டுக்கும் மத்தியில் சில படகுகள் கிளாலியை வந்தடைந்தன மேற்படி தகவல்களை கிளிநொச்சியிலிருந்து விபத்து காரணமாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காகவந்த ஜெகநாதன் [வயது 20] என்பவர் தெரிவித்தார்

### தமிழ்

இங்கிருந்த குவேனி இனத்தினர். விஜயனை காப்பாற்றும்படி விஷ்ணு தெய்வத்தையே வணங்கினர்.

துட்டகைமுனு எல்லாளனுடன் போரிடும் முன்பு கதிர்காம முருகனை வணங்கி அருள்பெற்றே சென்றான். இப்படி அன்னியோன்னியமாக இருந்த சமுதாயம் சுதந்திரத்தின் பின்னர் பிரிவு பிடிக்குள் விழ ஆரம்பித்தது.

பல்கலைக்கழக கல்வி தரப்படுத்தப்பட்டமை, தமிழ்ப் பகுதி பொருளாதாரத்திற்காக தொழிற்சாலைகள் உருவாக்கப்படாமை போன்ற காரணங்களே தமிழ் மக்களை விரக்தி அடைய வைத்தன.

இவைகளின் எதிரொலியே 1957 இல் ஏற்பட்ட தமிழ்-சிங்கள கலவரமாகும். 1956 இல் ஏற்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தின் எதிரொலி இன்று சிங்கள மக்களிடமும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. தாங்கள் ஆங்கிலக் கல்வி அறிவில் இருந்து ஒதுக்கப்பட்டுவிட்டோம் என்பதே அவ்விரக்தியாகும்.

மொழி பல வகைகளிலும் பிரச்சினைகளுக்கு காரணமாக்கப்பட்டிருக்கின்றன. மனிதன்வாழ்வதற்கே மொழி. மொழியின் காரணமாக மனிதன் சாகக்கூடாது என்றார்.

இந்த வைபவத்தில் கொட்டாஞ்சேனை சுமித்ரா ராமய பிக்கு தம்மலங்கார தேரோ உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

### செலவு

மூவாயிரம் ரூபா வரை செலவு செய்துள்ளனர். ஆனால், அரசு பயிற்சி முடிவுத் தினத்தன்று கலந்து கொண்டவர்களுக்கு தலா 50 ரூபா வீதம் போக்குவரத்துச் செலவுப் பணம் என வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## இம்மாத நடுப்பகுதியில் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டத்திற்கான முதலாம் ஆண்டுக்குரிய பரீட்சையின் பெறுபேறுகள் மிகவிரைவில் வெளியிடப்படவுள்ளன.

கடந்த வருடம் மேற்படி பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களுக்கான கலை, வர்த்தக துறைகளின் முதலாம் ஆண்டுக்குரிய பரீட்சைகள் நடைபெற்றன. இப்பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் யாவும் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன. இம்மாத நடுப்பகுதிக்கிடையில் மேற்படி பரீட்சை முடிவுகள் பரீட்சார்த்திகளின் கைகளுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 02.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7473

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

41-1092, 24-1205, 43-1019, 27-5912, 26-1735,
26-4885, 24-6699, 26-2414, 22-3887, 24-3844,
22-3088, 26-8497, 22-6897, 26-5846, 42-6226,
26-8674 22-0777, 24-4361, 24-9489, 22-6005,
24-8558, 41-9652, 42-2397, 41-8617, 24-5454.
42-7975, 41-6686, 28-1049, 24-0922, 22-9127,
26-3146, 27-7263, 41-5015, 24-3594, 26-5882,
27-1380, 24-7327, 24-5241, 26-6062, 26-2502,
40-1688, 41-9355, 26-4526, 26-9992.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்,

41-9530, 24 7941, 26-0711, 42-0704, 26-6320,
41-9791, 24-2493, 26-1728, 24-7044, 28-3029,
24-4560, 22-4862, 24-4957, 27-7419, 24-6663,
27-9052, 26-1253, 26-9495, 41-9165, 42-2800,
24-1172, 24-8603.

## மரண அறிவித்தல்

## சின்னக்குட்டி தம்பிராசா

சண்டிலிப்பாய் காளிகோயிலடியைச் சேர்ந்த சின்னக்குட்டி தம்பிராசா காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் [T பாலன் அன்சன்ஸ் கோண்டாவில்], சிவகுருநாதன், சிவராஜா [விநாயகர் ஸ்ரோர்ஸ் சண்டிலிப்பாய்], தருமரத்தினம், குணராசா [சவுதி], சிவபாக்கியம், விமலாதேவி, கமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாகமுத்து [உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் கோப்பாய்], புஸ்பராணி, கலாவதி நாகராஜா [ஆசிரியர் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலாலயம்], சறோஜாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் யாழினி, கமலினி [யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்], உமாரஷிகா, வாசுகி, உமாறமணன், வஜிதா, பால்ராஜ், பானுஜா, பிரதீபன் ஆகியோரது அன்புப பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (03-01-93) பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி, காளிகோவிலடி. [3916] தகவல் குடும்பத்தினர்